தினமணி

**மண் பரிசோதனை செய்வது எப்படி? - வேளாண் அதிகாரி தகவல்**

First Published : 20 May 2011 11:01:06 AM IST

திருவாடானை, மே 19: திருவாடானை தாலுகா, ஆர்.எஸ்.மங்கலம் பகுதி விவசாயிகளுக்கு, மண் பரிசோதனை செய்வது எப்படி என்று வேளாண்மை உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் விளக்கமளித்தார்.

ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சுமார் 50 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தின் இரண்டாவது பெரிய கண்மாயும் இங்குதான் உள்ளது.

இப்போது பயிர் அறுவடை காலம் முடிந்து கோடை உழவு துவங்கியுள்ளது. சாகுபடி இல்லாத இத்தருணத்தில் வயல் மண்ணை பரிசோதனை செய்வது மிகவும் அவசியம்.

இப்போது ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் மேட்டு சோழந்தூர், ஊரணங்குடி, ஓடைக்கால் ஆகிய கிராமங்களில் பரமக்குடி நடமாடும் மண் பரிசோதனை நிலைய ஊர்தி முகாமிட்டுள்ளது. மண் ஆய்வுக் கூட வேளாண் அலுவலர்கள் ராமலெட்சுமி, ராஜலெட்சுமி ஆகியோர் மண் மாதிரிகளை விவசாயிகளிடம் பெற்று கிராமங்களிலேயே ஆய்வு செய்து முடிவுகளை வழங்கி வருகின்றனர்.

ஊரணங்குடி கிராமத்தில் நடந்த முகாமில் ஊராட்சி மன்றத் தலைவர் மைக்கேல்ராஜ், தலைமை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், ஜெயக்குமார், இசக்கிமுத்து ஆகியோருடன் மண் மாதிரிகள் சேகரிக்கபட்டன. மண் மாதிரி முடிவுகளை ஆர்.எஸ்.மங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் முகம்மது அரப்துல் நசீர் விவாசாயிகளுக்கு வழங்கினார். மண் மாதிரி எடுப்பதன் முக்கியத்துவம், மண் மாதிரி முடிவின்படி எவ்வாறு உரம் இடுவது என விவசாயிகளுக்கு அவர் விளக்கினார். மண் மாதிரி எடுப்பதன் மூலம் மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் மற்றும் நுண்ணூட்ட சத்துகளை அறிந்திடலாம். உவர் தன்மை அறிந்திடலாம். பயிருக்கு ஏற்ற சீரான உரமிட்டு உரச் செலவை குறைத்திடலாம். மண்ணில் உள்ள குறைபாடுகளை சரிசெய்யலாம் என்றார் அவர்.

தினமலர்

இலங்கையில் உற்பத்தி குறைந்ததால்இந்தியாவின் தேங்காய் ஏற்றுமதி அதிகரிக்கும்

மே 21,2011,00:10



கொச்சி: உலகின் பல்வேறு நாடுகளுக்கு, அதிகளவில் தேங்காய் ஏற்றுமதி செய்து வரும் இலங்கையில், இவ்வாண்டு உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், நம் நாட்டின் தேங்காய் ஏற்றுமதி, நடப்பாண்டில் 30 சதவீதம் வளர்ச்சி காணும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் இருந்து, வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு அதிகளவில் தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், இலங்கையில் உற்பத்தி குறைந்துள்ளதால், நம் நாட்டில் இருந்து, தேங்காய் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.இதுகுறித்து, தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் உயரதிகாரி ஒருவர் கூறுகையில், 'தேங்காய் ஏற்றுமதி செய்வதற்காக அனுமதிவண்டி, தற்போது மாதம் ஒன்றுக்கு, 20-25 விண்ணப்பங்கள் வந்து கொண்டுள்ளன.

அதேசமயம், கடந்த ஆண்டு, இந்த எண்ணிக்கை, 10 -15 என்ற அளவில்தான் இருந்தது. எனவே, நடப்பாண்டில், நம் நாட்டின் தேங்காய் மற்றும் தேங்காய் பொருள்கள் ஏற்றுமதி, 30 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்' என்று தெரிவித்தார்.மேலும், உலகளவில் தேங்காய் உற்பத்தியில், பிலிப்பைன்ஸ் நாடு 35 சதவீத பங்களிப்புடன் முன்னிலையில் உள்ளது. இந்நாட்டிலும், உற்பத்தி குறைந்துள்ளது என்பதுடன், நகரமயமாதலால், இங்கு தென்னை

சாகுபடி பரப்பு குறைந்து வருவதாக கூறப்படுகிறது. இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில்,தேங்காய் உற்பத்தி குறைந்து போயுள்ளது.

இதனால், நம் நாட்டிலிருந்து அண்டை நாடுகளுக்கான தேங்காய் ஏற்றுமதி, உயர்ந்து வருகிறது. உள்நாட்டில் தேங்காயின் விலை, கடந்த ஒரு சில மாதங்களாக உயர்ந்து வருகிறது. இது, தென்னை சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு, ஆதாயம் அளிப்பதாக உள்ளது.

இருப்பினும், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில், தேங்காய் பறிப்பதற்கு, போதிய அளவிற்கு ஆட்கள் இல்லாததால், தேங்காய் பறிப்பு நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இதுநாள் வரை, தெற்காசிய நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு, இலங்கையில் இருந்துதான் தேங்காய் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால், தற்போது, இலங்கையில் உற்பத்தி குறைந்துள்ளதால், அந்நாடே இந்தியாவில் இருந்து, தேங்காயை இறக்குமதி செய்து கொள்ளும் நிலையில் உள்ளது.

குறிப்பாக, கடந்த ஒரு சில மாதங்களாக, நம்நாட்டிலிருந்து தேங்காயை குறிப்பிடத்தக்க அளவிற்கு பாகிஸ்தான், இறக்குமதி செய்து கொள்கிறது. வளைகுடா நாடுகளுக்கும், இங்கிருந்து தேங்காய் அதிக அளவில் ஏற்றுமதியாகி வருகிறது.

உள்நாட்டில் தேங்காய் உற்பத்தியில் முன்னிலையில் உள்ள கேரளாவிலும், சென்ற ஆண்டை விட இவ்வாண்டு, இதன் உற்பத்தி குறைந்துள்ளது. இது, தமிழ்நாட்டு தென்னை சாகுபடியாளர்களுக்கு, மிகப்பெரிய வாய்ப்பை வழங்கியுள்ளது. ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும், தேங்காய் உற்பத்தி, சென்ற ஆண்டைப் போன்றே உள்ளது.

சர்வதேச அளவில் தேங்காய்க்கான தேவை உயர்ந்துள்ளதும், உள்நாட்டில், இதன் விலை அதிகரிப்பிற்கு காரணமாக கூறப்படுகிறது. தற்போது, இந்தியாவில், பல மாநிலங்களில் கடும் கோடை நிலவி வருவதால், இளநீர் பயன்பாடு உயர்ந்துள்ளது. இதுவும், தேங்காய் விலை உயர்விற்கு மற்றொரு காரணம்.

நகரங்களின் இளநீருக்கான தேவையை, கர்நாடகா, ஆந்திரா, மேற்கு வங்கம், ஒடிசா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் கடற்பகுதியில் அமைந்துள்ள தென்னந்தோப்புகள் ஈடு செய்கின்றன.

**அதிக ஆசையால் சீன விவசாயிகள் அவதி**

மே 21,2011,00:06



பீஜிங்: 'அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பர். இது தெரியாத சீன விவசாயிகள், பெரும் இழப்பை சந்தித்துள்ளனர். சீனாவில் டன்யங் பகுதியை சேர்ந்த விவŒõயிகள், தர்பூசணியை அதிகளவில் பயிரிட்டனர். பழத்தை பெருக்க வைத்து, எடையை அதிகரித்தால், அதிக லாபம் கிடைக்கும் என்ற ஆசை அவர்களை உந்தி தள்ளியது.


அதனால், பயிர்களுக்கான'போர்குளோர்பெனுரான்' என்ற ரசாயன ஊக்க மருந்தை, வயலில் தெளித்தனர். இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. தர்பூசணி பழங்கள் வழக்கத்தை விட, பிரமாண்டமாக காய்க்கத் தொடங்கின.

இதனால், மகிழ்ச்சியடைந்த விவசாயிகள், அறுவடைக்கு தயாரான போது தான் அந்த அதிர்ச்சி காத்திருந்தது. அளவிற்கு அதிகமாக பெருத்துவிட்டதால், தர்பூசணி பழங்கள், வெடித்து, வாய்பிளக்கத் தொடங்கின.

இதுபோல், 115 ஏக்கர் பரப்பில் பயிரிட்ட தர்பூசணி பழங்கள் அனைத்தும் பிளந்து கொண்டதால், நல்ல விலை கிடைக்காமல், வந்த விலைக்கு அவற்றை விற்க துவங்கியுள்ளனர் விவசாயிகள். ரசாயன கலவையின் வீரியம், மழையின் சதி உள்ளிட்ட காரணங்களால், பழங்கள் வெடிக்கத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. அதிக லாபம் பார்க்க ஆசைப்பட்ட விவசாயிகள், அதிக இழப்பிற்கு ஆளாகியுள்ளனர்.

அபரிமிதமான உற்பத்தியால் மக்காச்சோளம் ஏற்றுமதி உயர வாய்ப்பு

மே 21,2011,00:06



புதுடில்லி: அமோக விளைச்சல் காரணமாக, இந்தியாவின் மக்காச்சோளம் ஏற்றுமதி, 24 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, அமெரிக்க உணவு தானியங்கள் கவுன்சில் மதிப்பிட்டுள்ளது.இந்தியாவிலிருந்து அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு, மக்காச் சோளம் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உள்நாட்டில், மக்காச் சோளம் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில் (நவம்பர்- அக்டோபர்), மக்காச்சோளம் ஏற்றுமதி, 24 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, இதற்கு முந்தைய (2009-10) ஆண்டின், சந்தை பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 33 சதவீதம் (18 லட்சம் டன்) அதிகம்.நடப்பு சந்தை பருவத்தின் தொடக்கத்தில், இந்திய மக்காச் சோளத்திற்கு அமெரிக்காவில் அதிக விலை கிடைத்ததால், இதன் ஏற்றுமதி அதிகரித்தது.

வழக்கமாக, கரீப் பருவ அறுவடைக்குப் பிறகு, அக்டோபர் முதல் டிŒம்பர் வரையில் சந்தையில் புதிய மக்காச்சோளம் வரத்து, அதிகளவில் இருக்கும். அப்@பாது மக்காசோளம் விலை, குறைவாகவே இருக்கும்.சென்ற ஆண்டின் நவம்பர் மாதத்தில், இந்தியாவில், ஒரு டன் மக்காச்சோளம் விலை, 9,237 ரூபாய் என்ற அளவில் இருந்தது. அதேசமயம், அமெரிக்காவில் இதன் விலை, டன் ஒன்றுக்கு 10 ஆயிரத்து 164 ரூபாயாக அதிகரித்திருந்தது.வேளாண் அமைச்சகத்தின் மூன்றாவது மறு மதிப்பீட்டின் படி, நடப்பு அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தை பருவத்தில், நாட்டின் மக்காச்சோளம் உற்பத்தி, 2.20 கோடி டன்னாக இருக்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது.உள்நாட்டு சந்தையில், சென்ற 13ம்ஏததி நிலவரப்படி, ஒரு டன் மக்காச்சோளம் 10 ஆயிரத்து 761 ரூபாய்க்கு விற்பனையானது. இது, சென்றாண்டு, இதே காலத்தில் நிலவிய விலையை விட, 16 சதவீதம் அதிகம்.

**கொப்பரை விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 21,2011,01:39 IST

கோபிசெட்டிபாளையம்: தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு எண்ணெய் செல்வது குறைவு எதிரொலியால் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு ஒரு ரூபாய் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கோபி, பெருந்துறை, கொடுமுடி, காங்கேயம் பகுதியில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில் தேங்காய் எண்ணெய் அனுப்பப்படுகிறது. சில நாட்களாக இதன் அளவு குறைந்து விட்டது. இதன் காரணமாக கொப்பரை தேய்காய் விலை திடீரென சரிவு கண்டுள்ளது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு சென்ற வாரம் 230 மூட்டை தேங்காய் வரத்தானது. ஒரு கிலோ 68.27 ரூபாய் முதல் 72.29 ரூபாய் வரை விற்கப்பட்டது.

நேற்றைய மார்க்கெட்டுக்கு 128 மூட்டைகள் மட்டுமே வரத்தானது. ஒரு கிலோ 69.59 ரூபாய் முதல் 71.05 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சென்ற வாரத்தை காட்டிலும், கிலோவுக்கு ஒரு ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. விவசாயி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அதிகளவில் தேங்காய் எண்ணெய் அனுப்பப்படுகிறது. கேரளாவில் தேங்காய் சீஸன் என்பதால், எண்ணெய் அதிகளவில் கிடைக்கிறது. தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு செல்லும் எண்ணெய் அளவு குறைந்து விட்டது. எண்ணெய் அனுப்புவது குறைவு காரணமாக, கொப்பரை விலை திடீரென கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைந்துள்ளது. கேரளாவில் ஜூன் மாதம் மழை சீஸன் துவங்கும். அப்போது, தேங்காய் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மாம்பழம் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : மே 21,2011,23:11 IST

தேனி:மாம்பழம் வரத்து அதிகரிப்பால், விலை குறைந்துள்ளது. தேனி மார்க்கெட்டில், கிலோ 40 ரூபாய்க்கும் மேல் விற்பனை செய்யப்படுகிறது. தேனி உழவர்சந்தையில், கிரேப் மாம்பழம் கிலோ 15 ரூபாய், கல்லாமை 10 ரூபாய், பங்கனப்பள்ளி, பஞ்சவர்ணம், செந்தூரம் மாம்பழங்கள் கிலோ 25 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.இயற்கை முறையில் பழுக்க வைப்பதால் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச்செல்கின்றனர்.

**மானிய விலையில் தென்னை டானிக்**

பதிவு செய்த நாள் : மே 21,2011,23:28 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் தோட்டக்கலைத்துறை சார்பில் தென்னைகளில் காய் பலன் அதிகரிக்கவும், குரும்பல் உதிர்வதை தடுக்கவும், பச்சையம் அதிகரிக்கவும் நுண்ணூட்ட டானிக், மானிய விலையில் வழங்கப்படுகிது. வேளாண் பல்கலை வழங்கும் இந்த டானிக் 25 சத மானியத்தில் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் ஸ்ரீவில்லிபுத்தூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தோட்டக்கலை அலுவலர் ஆழ்வார்சாமி தெரிவித்தார்.

**அமோக விளைச்சலுக்கு விதைகள் அவசியம் : விதை ஆய்வு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : மே 21,2011,02:16 IST

தூத்துக்குடி : தரமான விதைகளை விதைத்தால் அமோக விளைச்சல் பெறலாம் என்று வேளாண்மை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.
உழவுத்தொழிலில் விதை என்பது முக்கிய இடு பொருளாகும். தரமான விதையினை பயன்படுத்தும்போது நாம் அதிக இலாபத்தை பெறலாம். தரமான விதை என்பது ஒரே சீரான பருமனை கொண்டது. நல்ல முளைப்புத்திறனை, குறிப்பிட்ட அளவு ஈரப்பதம், பிற இரக கலவன்கள், பிற பயிர் விதைகள் மற்றும் களைவிதைகள் இல்லாதிருத்தல், பூச்சி நோய் தாக்காமல் இருப்பது ஆகியவை ஆகும். விதைகளின் தரத்தினை அறிந்து பயிர் செய்வதற்காக தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு விதைச் சான்றுத் துறையின் கீழ் விதை பரிசோதனை நிலையத்தில் விதையின் முளைப்புத்திறன், ஈரப்பதம், விதையின் தரம் ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் தூய விதை, பிற தானிய விதை, உயிரற்ற பொருள் ஆகியவற்றையும் நவீன முறையில் ஆராய்ந்து விவசாயிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் முடிவுகள் குறிப்பிட்ட காலத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன.
விதை பரிசோதனை செய்வதால் விதைகளின் தரம் தெரிந்து விடுவதால் விதைப்பதற்கு ஆகும் விதையின் அளவை நாம் தெரிந்து கொள்ளலாம். இதன் மூலமாக விதை வாங்குவதற்கு ஆகும் செலவினை குறைக்கலாம்.

விதைப்பின்போது தரமான விதைகளை பயன்படுத்தவதால் விதைப்பிற்குப் பின் பயிர் பாதுகாப்புக்கென செய்யப்படும் செலவானது குறைகிறது. விதை குவியல்களை எந்த அளவிற்கு

சுத்தம் செய்து காய வைக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய முடியும். விதையின் தரம் நன்றாக இருந்தால் விதையினை வாங்குவோரிடம் நல்ல விலையினை பெறலாம்.

குறைந்த நிலப்பரப்பிலும் நிறைந்த மகசூலை பெற்று அதிக வருவாயினை பெறலாம். எனவே விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் ஆகியோர் தங்களிடம் விற்பனைக்காவும், விதைப்பதற்காகவும் வைத்துள்ள விதைகளின் தரத்தினை அறிந்து அதிக லாபம் பெற்றிட விதையினை வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், மாவட்ட அட்சியர் அலுவலக வளாகம்,கோரம்பள்ளம், தூத்துக்குடி - 628 101 என்று முகவரிக்கு அனுப்ப வேண்டும். விதை மாதிரியினை நேரிலோ, தபால் மூலமாகவோ அனுப்பலாம். ஒரு விதை மாதிரியினை ஆய்வு செய்திட ரூ.30/- கட்டணமாக பெறப்படுகிறது என்று வேளாண்மை அலுவலர்கள் கலைச்செல்வி மற்றும் நெடுஞ்செழியன் தெரிவித்துக்கொள்கிறனர்.

தினகரன்

## வரத்து அதிகரிப்பு துவரம் பருப்பு விலை குவிண்டால் ரூ.4500ஆக சரிவு

பதிவு செய்த நாள் 5/21/2011 12:03:29 AM



சேலம் : மகாராஷ்டிராவில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதால் சேலத்தில் துவரம் பருப்பு விலை குவிண்டால் ரூ.4500 ஆக சரிந்துள்ளது. தமிழக மார்க்கெட்டுகளுக்கு ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து பருப்பு வகைகள்

விற்பனைக்கு வருகிறது. துவரம் பருப்பு விலை கடந்த ஆண்டு உச்சத்தை தொட்டது. ஒரு குவிண்டால் (100 கிலோ) ரூ.7800 வரை விற்பனையானது. பின்னர் இந்த ஆண்டு துவக்கத்தில் புது பருப்பு வந்ததையடுத்து விலை குறைந்தது. பிப்ரவரி மாதத்தில் குவிண்டால் ரூ.6 ஆயிரத்துக்கு விற்பனையானது.

இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக தமிழக சந்தைகளுக்கு மகாராஷ்டிரா துவரம் பருப்பு அதிகளவு வரத்துவங்கியுள்ளது. சேலம் வெவ்வாய்பேட்டை மார்க்கெட்டுக்கு அதிகளவு துவரம் பருப்பு வந்துள்ளது. இதனால் கடந்த வாரம் குவிண்டால் ஸ்5 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட துவரம் பருப்பு, நேற்று ரூ.4500 ஆக சரிந்தது.

முதல் தர துவரம் பருப்பு ஸ்6 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதே போல் பாசிப்பருப்பு ரூ.5,700ல் இருந்து ஸ்6 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. கடலை பருப்பு ரூ.3600க்கு விற்பனையானது. இதுபற்றி வியாபாரிகள் கூறுகையில், சேலம் மார்க்கெட்டுக்கு மகாராஷ்டிரா துவரம் பருப்பு அதிகளவு வரத் துவங்கியுள்ளது. இதனால் குவிண்டால் ரூ.4500 ஆக சரிந்துள்ளது. துவரம் பருப்பு விலை இன்னும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.